**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 139/2019**

**PW7**

| | | |
|---|---|---|
| Name | : | சிவக்குமார் |
| Father's/Husband's Name | : | காசி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.12.2024.
Accused present.

**முதல் விசாரணை**

நான் ஆத்துவாம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன சேகரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். அவர்கள் இருவரும் என் உறவினர்கள் தான். சாட்சிகள் ரேகா, காவியா , வெங்கடேசன், ராஜசேகர் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரு நாள் அ.சா.4 ராஜசேகர் எனக்கு போன் செய்து சேகருக்கும் சிவராஜிற்கும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது என்றும், சேகர் வீட்டிற்கு வருமாறு சொன்னார். இறந்த சேகர் வீடு மற்றும் எதிரியின் வீடு கொல்லைமேட்டில் உள்ளது. நான் போய் பார்த்தபோது எதிரியும் அவர் மனைவியும் அங்கிருந்து சென்று கொண்டிருந்தார்கள். சேகர் தலையில் அடிபட்டு ரேகா அவரது தலையை துணியால் அமுக்கி பிடித்துக்கொண்டிருந்தார். ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அங்கு அ.சா.3 காவியா, வெங்கடேசன், முருகன் மற்றும் மஞ்சுளா ஆகியோர் இருந்தார்கள். நான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தேன். நானும் சேகரின் மனைவி ரேகாவும் சேகரை ஆம்புலன்சில் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு மருத்துவர் சேகர் கோமா நிலையில் இருப்பதாக சொன்னார்கள். இரண்டு நாட்களுக்கு பின் சேகர் இறந்து விட்டார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

நான் தற்போது ஆத்துவாம்பாடி கிராம ஊராட்சி மன்ற தலைவராக உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த காலத்திலும் தற்போதும் ஊரில் ஏதாவது பிரச்சனை என்று என்னை அழைத்தால் நான் செல்வது உண்டு. அந்த வகையில் போலிசாரிடம் எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. ஆத்துவாம்பாடி கிராமத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 1.3 கி.மீ இருக்கும். நான் செல்லும்போது முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரியும், அவர் மனைவியும் சேகர் வீட்டில் இருந்து சென்றார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்றால் மாலை சுமார் 07.00 மணி இருக்கும். சேகருக்கு எப்படி அடிபட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. சேகரை எத்தனை மணிக்கு மருத்துவமனையில் சேர்த்தோம் என்று ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த அன்று சேகர் அளவுக்கு அதிகமான குடிபோதையில் இருந்தார் என்றால் இல்லை. நான் குடிபோதையில் இல்லை என்று பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவர் பரிசோதனை செய்தபோது இறந்துபோன சேகருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று நான் சொன்னேன். நான் சேகரை ஒருவர் கொம்பால் அடித்துவிட்டதாக சொன்னேன். அன்று இரவே மருத்துவர்கள் சேகருக்கு சிகிச்சை அளித்தார்கள். நான் மறுநாள் காலை 09.00 மணிவரை மருத்துவமனையில்தான் இருந்தேன். தற்போது சாட்சி மருத்துவமனையில் இருந்த நேரம் தெரியவில்லை என்று சொல்கிறார். சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சேகர் குடிபோதையில் ஓடையில் இருந்த வெட்டுக்கல்லின் மீது விழுந்து காயம் அடைந்து இறந்துபோனார் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.